புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • பிப்ரவரி 06, 2025 • புரட்சி 25 • முழக்கம் 04 • விலை ரூ.3.00

# ஈழத்தில் பிரபாகரன் நடத்திய பெரியார் ஆட்சி!

**கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் *b&w tamil youtube* சேனலுக்கு அளித்த நேர்காணலில், மேதகு பிரபாகரன் பெரியார் கொள்கைகளையே ஈழத்தில் செயல்படுத்தினார் என்பதை விரிவாக விளக்கினார் .**

**நெறியாளர் : 2006-இல் ஈழத்துக்கு ஒரு மாதம் சென்று வந்தீர்களே, அந்த நட்பு எப்படி உருவானது?**

**பொதுச்செயலாளர்:** *2006-க்கு முன்பு தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கத்தோடு இணைந்து பல்வேறு களப்பணிகள், அரசியல் பணிகள் செய்திருக்கிறோம். அதன்காரணமாக அவர்களோடு நெருக்கமான நட்பு ஏற்பட்டது. குறிப்பாக 1982,1983 ஆண்டுகாலத்தில்* ***'விடுதலை'*** *பத்திரிகையில் நான் பொறுப்பில் இருந்தேன். தமிழீழ விடுதலைப்புலிகள் ஆதரவு தேடி தமிழ்நாடு வந்த காலகட்டம் அது.*

*அப்போது அவர்கள் எங்களோடு நெருக்கமாக இருந்தார்கள். பல்வேறு குழுக்கள் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். அதில் விடுதலைப் புலிகள் இயக்கம் தான் சரியான இயக்கம் என்று நாங்கள் தேர்ந்தெடுத்து அந்த இயக்கத்தை முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, அப்போது திராவிடர் கழகத்தில் இருந்த தோழர்கள் கொளத்தூர் மணி, கோவை இராமகிருஷ்ணன், நான் உட்பட எல்லோரும் இணைந்து விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஆதரவுக் கரம் நீட்டினோம். அந்த காலகட்டத்தில்* ***'விடுதலை'*** *பத்திரிகையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரப்பூர்வமான ஏடு போல, அவர்களுடைய செய்திகள் முதன்மையாக வெளிவந்து கொண்டிருந்தன.*

*அப்போது அரசியல் பிரிவு பொறுப்பாளராக செயல்பட்ட 'பேபி சுப்பிரமணியம்' என்ற விடுதலைப்புலி தோழர் பிரபாகரனுக்கு மிக நெருக்கமானவர் அவர்தான் இங்கே அரசியல் பொறுப்புகளைக் கவனித்துக் கொண்டார். அவர் எங்கள் திராவிடர் கழகத்தோடும், என்னோடும், நெருக்கமானத் தொடர்பில் இருந்தார். பேபி சுப்பிரமணியம் என்னுடைய இல்லத்திலேயே, 9 ஆண்டுகள் குடும்ப உறுப்பினராகவே தங்கி இருந்தார். கிட்டத்தட்ட என்னுடைய இல்லம் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு அலுவலகமாகவே இருந்தது. கிட்டு அவர்கள் என்னுடைய இல்லத்திற்கு வந்தபோது வீட்டிலிருந்த சுவரொட்டிகள், பதாகைகள் பார்த்து,* ***"இது என்ன புலிகளின் அலுவலகமா என்ன?"*** *என்று கேட்டார். இந்த இல்லத்தை அரசியல் பிரிவு அலுவலகமாக நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று பேபி சுப்பிரமணியம் சொன்னார். எங்களுடன் இணைந்து பல தோழர்கள் இந்த களப்பணியில் அப்போது ஈடுப்பட்டார்கள் .*

**நெறியாளர் : பேபி சுப்பிரமணியம் தங்கி இருந்த காலக்கட்டம் எது?**

**பொதுச்செயலாளர்:** *1982-1990 வரை அவர் தங்கி இருந்தார். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை நடப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே அவர் ஈழத்துக்கு பயணப்பட்டார். பிரேமதாச இலங்கை அதிபராக இருந்த காலக்கட்டம். அப்போது ஒரு சமாதானம் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டது. இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து ஈழத்தில் இருந்து இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்குப் போராடிய காலம்கட்டம். அந்தச் சூழலில் அவர் ஈழத்துக்குச் சென்றார். நாங்கள் கடற்கரை வரை சென்று படகில் வழி அனுப்பினோம்.*

**நெறியாளர் : அன்றைக்கு தமிழீழ விடுதலைக்குப் பாடுபட்ட பல குழுக்கள் தமிழ்நாட்டில் இருந்தாலும் கூட எப்படி விடுதலைப்புலிகள்தான் சரியான இயக்கம் என்று அடையாளம் கண்டு ஆதரித்தீர்கள்?**

**பொதுச்செயலாளர்:** *ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ், டெலோ, புளோட் என்ற குழுக்கள் இருந்தன. விடுதலைப் புலிகளின் கடந்த கால வரலாறுகளையும், செயல்பாட்டின் நேர்மைகளையும், கொள்கை வெளியீடுகளையும் அறிந்தபோது இருந்த குழுக்களில் விடுதலைப்புலிகள் தான் சரியான இயக்கம் என்று நாங்கள் அடையாளம் கண்டு ஆதரித்தோம். பழ.நெடுமாறன் அவர்களும் ஆதரித்தார். அனைத்துக் குழுக்களும் ஒன்றாக சேர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த வைகோ, அதற்குப் பின்னர் விடுதலைப்புலிகள்தான் சரியான இயக்கம் என்ற முடிவுக்கு வந்தார்.*

*1990-களில் பேபி சுப்பிரமணியம் அவர்கள் ஈழத்துக்கு சென்ற பிறகு முதலில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா எடுக்கப் போகிறோம், நீங்களும் கவிஞர் இன்குலாப் மற்றும் பெரியாரிய தோழர்களும் விழாவுக்கு வரத் தயாராக இருங்கள் என்று கூறிவிட்டுத்தான் ஈழத்துக்கே பயணப்பட்டார். ஈழத்துக்குப் போன சில மாதங்களிலேயே சூழ்நிலை மாறிவிட்டது. போராட்டங்கள் வெடிக்க ஆரம்பித்து விட்டன.*

**நெறியாளர் : நீங்கள் எப்போது ஈழத்துக்குப் பயணப்பட்டீர்கள்?**

**பொதுச்செயலாளர்:** *நார்வே ஒப்பந்தத்தின் கீழ் போர் நிறுத்தம் ஏற்பட்ட அந்த காலகட்டத்தில்தான், நான் 2006 ஏப்ரல் மாதம் 12 தேதி பேபி சுப்பிரமணியம் அழைப்பை ஏற்று ஈழத்துக்கு சென்றேன். அப்போது போர் நிறுத்த சமாதான ஒப்பந்தம் முடிவுக்கு நெருங்கிக் கொண்டு இருந்த காலமும் கூட. நான் கிளிநொச்சியில் தங்கி இருந்தேன். அப்போது, பேபி சுப்பிரமணியம் மற்றும் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் ஆகியோருடன் இணைந்து மேதகு பிரபாகரனை இரண்டு முறை சந்தித்தேன்.*

*தங்கி இருக்கும்போதே போர் மேகங்கள் சூழ ஆரம்பித்து விட்டன. சிங்கள இராணுவத் தளபதி பொன்சேகா மீது தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலைத் தொடர்ந்து, உடனே தமிழீழப் பகுதிக்கும் சிங்களப் பகுதிக்கும் இருந்த எல்லைப் பகுதிகள் துண்டிக்கப்பட்டன. நான் தமிழ்நாடு திரும்பிப் போக முடியாத சூழல் ஏற்பட்டது. சமாதான உடன்படிக்கை இருந்த காரணத்தினால் ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு வழியாக வழி திறக்கப்பட்டது. நான் கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்கு வந்து விமானத்துக்கு செல்ல வேண்டும். தற்கொலைப் படைத் தாக்குதல் நடந்ததன் காரணமாக வழிநெடுக கடுமையான சிங்கள இராணுவத்தினுடைய சோதனைகள் நடந்து கொண்டு இருந்தன.*

*அப்போது என்னை பத்திரமாக கொழும்புக்கு அனுப்பி வைக்க விடுதலைப்புலிகள் ஒரு ஏற்பாடு செய்தனர். இலங்கை அரசாங்கத்திலேயே பணியாற்றும் ஒரு தமிழ் IAS அதிகாரி இருந்தார். அவர் விடுதலைப்புலிகளுக்கு மறைமுகமாக ஆதரவாக இருந்தார். தமிழ் IAS அதிகாரிக்கு வழங்கப்பட்டிருந்த சிங்கள அரசின் அடையாளம் பொறிக்கப்பட்ட அரசு வாகனத்தில், சிங்களம் தெரிந்த ஓட்டுநரை எனக்காக ஏற்பாடு செய்தனர். வழிநெடுகிலும் சிங்கள இராணுவத்தின் விசாரணை நடந்தது, சிங்களம் தெரிந்த ஓட்டுநர் அவர்களிடம் சிங்கள மொழி பேசி கெடுபிடியில் இருந்து என்னை பாதுகாப்பாக கொழும்பு விமான நிலையம் வரை கொண்டு சேர்த்தார். 2006 மே மாதம் 7-ஆம் தேதி சென்னை திரும்பினேன். ஏறக்குறைய 25 நாட்கள் நான் கிளிநொச்சியில் தங்கி இருந்தேன்.*

*குறிப்பாக நான் ஈழத்துக்கு சென்றபோது கிளிநொச்சியைத் தலைமையகமாகக் கொண்டு விடுதலைப்புலிகளின் ஆட்சியே நடைபெற்றது. அந்த ஆட்சி எப்படி நடந்தது என்பது குறித்து நான் பார்த்த காட்சிகளை, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு சொல்ல வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.*

*பெரியாருக்கும் பிரபாகரனுக்கும் ஏதோ முரண்பாடுகள் இருப்பதைப் போல சில நபர்கள் பேசி வருகிறார்கள். இது அப்பட்டமான பொய் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். உண்மையில் பிரபாகரன் பெரியார் கொள்கையில் மிகவும் ஈர்க்கப்பட்டு இருந்தார். அவர் தமிழ்நாட்டிற்கு முதலில் வந்தபோது அவருக்கு இறை நம்பிக்கை இருந்தது. திருப்போரூரில் இருக்கிற முருகன் கோவிலில்தான் திருமணம் செய்தார்.*

*அதற்குப்பிறகு, முதன்முதலாக வெளிநாட்டில் இருந்து வெற்றிகரமாக சென்னை துறைமுகத்திற்கு ஆயுதங்கள் பத்திரமாக வந்து சேர்ந்தபோது, அதற்காக பழனிமுருகன் கோவிலில் மொட்டை அடித்துக் கொண்டார். அப்போதே அவருடன் நெருக்கமாக இருந்த தோழர் ஆறுச்சாமி போன்ற பெரியாரிய இயக்க தோழர்கள்,* ***"மொட்டை அடித்தால் எல்லாம் சரியாய் போய்டுமா?"*** *என பிரபாகரனுடன் கேலி பேசுவார்கள்.*

*இந்த கிண்டல்களை அவர் எளிமையாக*

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

## கல்வி உரிமையைப் பறிக்காதே!
## யு.ஜி.சி.யைக் கண்டித்துக் கழகம் ஆர்ப்பாட்டம்

கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவிப்பு!
ஒன்றிய அரசே !
கல்வி உரிமையைப் பறிக்காதே !
இட ஒதுக்கீட்டு உரிமையைப் பறிக்காதே!

ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து நம் மக்களின் கல்வி உரிமையைப் பறிக்கும் வகையில் பல்வேறு அறிவிப்புகள், விதிகளில் திருத்தங்களை செய்து அறிவித்து வருகிறது.சமீபத்தில் UGC விதிகளில் திருத்தம் செய்து புதிய விதிகளை ஒன்றிய பாஜக அரசு வெளியிட்டுள்ளது. அது மாநிலக் கல்வி உரிமைகளைப் பறிக்கும் வண்ணம் குறிப்பாக தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பைச் சிதைக்கும் வகையில் உள்ளது.

மேலும் இந்த புதிய விதிகளில் உயர்கல்வியில் இட ஒதுக்கீட்டை முற்றிலும் ஒழிக்கும் திட்டத்துடன் திருத்தங்களை செய்திருக்கிறது ஒன்றிய பாஜக அரசு.

"எதைக் கொடுத்தாலும் சூத்திரனுக்குக் கல்வியைக் கொடுக்காதே" எனும் சனாதன தர்மத்தை சட்டப்படியே நிறைவேற்ற துடிக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் எதிர்வரும் பிப்.13ஆம் தேதி வியாழக்கிழமை அனைத்து



மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டத்தை ஒத்த கருத்துள்ள தோழமை அமைப்புகளை ஒன்றிணைத்துக் கொண்டு நடத்த உள்ளது.

பாஜக அரசின் இந்த கொடும் போக்கை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லவும், நமது கண்டனங்களை ஒன்றிய அரசுக்குப் பதிவு செய்யவும் இந்த ஆர்ப்பாட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் நடத்துமாறு தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கொளத்தூர் மணி
தலைவர்,
திராவிடர் விடுதலைக் கழகம்.
04.02.25.

தலையங்கம்

# மாநில உரிமையைப் பறிக்கும் உச்சநீதிமன்றம்!

தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலங்களில் முதுநிலை மருத்துவப் படிப்புகளில், மாநில ஒதுக்கீட்டு இடங்களில், வசிப்பிடத்தின் அடிப்படையில் உள்ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம், வசிப்பிடத்தின் அடிப்படையில் உள்ஒதுக்கீடு வழங்குவது, அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என உத்தரவிட்டிருந்தது. இதை எதிர்த்து, 2019-இல் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உச்சநீதிமன்றமும் முதுநிலை படிப்புகளில், வசிப்பிடத்தின் அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்குவது என்பது, அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்று ஜனவரி 30-ஆம் தேதி தீர்ப்பளித்துள்ளது.

உச்சநீதிமன்றம் தற்போது வழங்கியுள்ள இத்தீர்ப்பால் தமிழ்நாடு பின்பற்றி வரும் 69% இடஒதுக்கீட்டு முறையை பின்பற்ற முடியாத நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பலமான மருத்துவக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டிற்கு இத்தீர்ப்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மருத்துவ முதுகலை படிப்பில் 2 ஆயிரத்து 294 இடங்கள் இருக்கின்றன. அதில் இடஒதுக்கீட்டின்படி ஒன்றிய அரசு 50 விழுக்காடு இடங்களையும், தமிழ்நாடு அரசு 50 விழுக்காடு இடங்களையும் நிரப்பி வருகிறது. அதன்படி பார்த்தால் தமிழ்நாடு அரசின் வசம் சுமார் 1,200 இடங்கள் உள்ளன. தற்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பால் அந்த 1,200 இடங்களையும் பறிகொடுக்க நேரிடும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மருத்துவ சேவைகள் என்பது மற்ற மாநிலங்களைப் போல நகரங்களில் மட்டும் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல. ஒவ்வொரு 5 கிலோ மீட்டருக்குள்ளும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கும். அங்கே தங்கி 2 ஆண்டுகளுக்கு மருத்துவ சேவை புரியும் மருத்துவர்களுக்கு உயர்படிப்புக்கான மாணவர் சேர்க்கையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. கிராம அளவில் மருத்துவ சேவையை முறையாக வழங்கவும், மருத்துவர்களிடத்தில் சேவை மனப்பான்மையை வளர்க்கவும் இத்தகைய முயற்சிகள் பலன் தந்திருக்கின்றன. ஆனால் தற்போது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால், இத்தகைய சேவை மனப்பான்மையும் சேர்த்து ஒழிக்கப்படுகிறது.

MD, MS, DM, MCH போன்ற படிப்புகளுக்கான சேர்க்கை விகிதம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகமாக உள்ளது. குறிப்பாக இரத்தநாள அறுவை சிகிச்சைக்கான மருத்துவர்களில் இந்தியாவில் சரிபாதி பேர் தமிழ்நாட்டில் உள்ளனர். அவர்களில் அனைவருமே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள். தமிழ்நாட்டின் சுமார் 15 இடங்களில் இரத்தநாள அறுவை சிகிச்சைக்கான மருத்துவக் கட்டமைப்புகள் உள்ளன. ஆனால் தமிழ்நாட்டைத் தவிர வேறெந்த மாநிலத்திலும் மாநிலத்தின் தலைநகரைத் தாண்டி வேறு இடங்களில் இரத்தநாள அறுவை சிகிச்சைக்கான மருத்துவமனைகளையோ, மருத்துவர்களையோ காண்பது அரிது. சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை உள்ளிட்ட அரசு மருத்துமனைகளில் இரத்தநாள அறுவை சிகிச்சைகளுக்கான பல நூற்றுக்கணக்கானோர் வெளிமாநிலங்களில் இருந்து சிகிச்சைக்காக வந்து கொண்டிருக்கின்றனர்.

இதுபோல பல்வேறு வகையான சிறப்பு மருத்துவர்களை அதிகம் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கு தமிழ்நாடு பின்பற்றி வரும் சமூகநீதிக் கோட்பாடும், அதன் வழிவந்த ஆட்சியாளர்களின் இடஒதுக்கீட்டு, உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கொள்கைகளுமே காரணம். ஆனால் அவற்றையெல்லாம் வசிப்பிடத்தின் அடிப்படையிலான இடஒதுக்கீட்டுப் பார்வை என்று எங்கோ டெல்லியில் அமர்ந்துகொண்டு தீர்ப்பை எழுதுவது, தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை மட்டும் குறைப்பதல்ல, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை மட்டும் சிதைப்பதல்ல. தமிழ்நாட்டில் வந்து சிகிச்சை பெற்றுப் பலனடையும் வெளிமாநிலத்தவர்களையும் சேர்த்தே பாதிக்கப்போகிறது.

மருத்துவ உயர்படிப்பில் ஏற்கெனவே ஒன்றிய அரசால் நிரப்பப்படாமல் இருந்த பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுகீட்டை, திமுக அரசு அமைந்த பிறகு சட்டப் போராட்டம் நடத்தி பெற்றுக்கொடுத்தது. இப்போது இதே விவகாரத்தில் மாநில அரசின் உரிமையைப் பறித்திருக்கிறது உச்சநீதிமன்றம். இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தை நாடவிருப்பதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். ஒன்றிய அரசு மாநில உரிமைகளைப் பறிப்பது போதாதென்று நீதிமன்றமும் தன் பங்குக்கு மாநில உரிமைகளைப் பறிப்பது என்பது கூட்டாட்சித் தர்மத்துக்கு எதிரானது. இதிலும் தமிழ்நாடு அரசு நடத்தப்போகிற சட்டப்போராட்டத்திற்கு ஜனநாயக சக்திகள் துணைநிற்போம்! தமிழ்நாட்டு மாணவர்களின் உரிமைக் காத்திடுவோம். தமிழ்நாடு ஏற்படுத்தி வைத்திருக்கிற வளமான மருத்துவக் கட்டமைப்பைப் பாதுகாத்திடுவோம்.

## பொதுவுடைமை இயக்கத்திற்கு உதவிய பெரியார் இயக்கம்

*அடக்குமுறையின் இருண்ட நாட்களில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒளியேற்றியப் பெருமை திராவிடர் கழகத்தையேச் சாரும். பெரியாரின் ‘விடுதலை’ இதழ் மட்டுமே துணிச்சலுடன் கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்தது. 1950 பிப்ரவரி 11-இல் சேலம் சிறையில் 22 கம்யூனிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்ட கொடூரத்தைக் கண்டித்து ‘விடுதலை’ தீவிரத் தலையங்கம் எழுதியது. “பலிப்பட்ட 22 வீரர்களின் பெயர்கள் கூட வெளியிடப்படவில்லை. மரக்கட்டைகளாகவா கருதுகிறீர்கள்? அவர்களுக்கும் குடும்பம், உறவுகள் உண்டு. விசாரணைக் குழுவில் கம்யூனிஸ்ட் பிரதிநிதி அல்லது தொழிற்சங்கத் தலைவர் சக்கரைச் செட்டியாராவது இருக்க வேண்டும்” என்று துணிச்சலாக எழுதியது. பெரியார் கண்டனக் கூட்டங்கள் நடத்த அறைகூவல் விடுத்தார். 1951-இல் கட்சித் தடை நீக்கப்பட்டபோது, தேர்தல் உடன்பாடு ஏற்பட்டது. தலைமறைவில் இருந்த பி.ராமமூர்த்தி பெரியார், குத்தூசி குருசாமியுடன் இரகசியமாக சந்தித்துப் பேசினார்.*

*நடிகவேள் எம்.ஆர்.ராதா தமிழ்நாடு முழுவதும் “ரத்தக்கண்ணீர்”, “முருகன்”, “பேப்பர் நியூஸ்” நாடகங்கள் நடத்தி நிதி திரட்டினார். பரமக்குடி, திருப்பூர், பொள்ளாச்சி, மதுரை, சென்னை என பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். வண்ணாரப்பேட்டையில் ஜீவாவுக்கு பிரச்சாரமும் செய்தார். புதுக்கோட்டை சிறையில் இருந்து விடுதலையான எம்.கல்யாணசுந்தரம், குத்தூசி குருசாமிக்கு நன்றிக் கடிதம் எழுதினார். “திராவிடர் கழக - கம்யூனிஸ்ட் கட்சி அய்க்கியம் தமிழ்நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் சக்தி” என்றுப் போற்றினார். 1965-இல் குத்தூசி குருசாமி மறைந்தபோது, செஞ்சட்டை அணிந்த தொழிலாளர்கள் அயனாவரம் சுடுகாடு வரை அணிவகுத்து மரியாதை செலுத்தினர்.*

*ஏனெனில் தடைக்காலத்தில் கம்யூனிஸ்டுகளுக்குப் புகலிடம் தந்த பெருந்தன்மை குத்தூசியாருக்கு உண்டு. மாஸ்டர் ராமுண்ணி - கிருஷ்ணாபாய் (ரமணிபாய்) தம்பதியரும் தலைமறைவுத் தோழர்களுக்கு உணவும் தங்குமிடமும் அளித்து உதவினர். இவ்வாறு மனிதநேயத்தின் உச்சத்தைக் காட்டிய திராவிடர் கழகத்தின் உதவிகளைத் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் இயக்கம் என்றும் மறக்காது என வரலாறு பதிவு செய்கிறது.*

***– தீக்கதிர் நாளேடு, (02.02.2025)***

### முதல் பக்கத் தொடர்ச்சி

*எடுத்துக்கொண்டு தான் பேசினார். அப்போது மேதகு பிரபாகரன் சொன்னது, **“அப்படியெல்லாம் இல்லை எதோ ஒரு நம்பிக்கையில் நான் இருக்கிறேன் அவ்வளவு தான்”** என்றார்.*

*பெரியார் இயக்கத் தோழர்களுடன் மிக நெருக்கமாக உரையாடினார். பெரியார் கொள்கைகளை விவாதிப்பார். விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு பெரியார் உணர்வாளர்கள் செய்த அற்பணிப்பான உதவிகள் மேதகு பிரபாகரனை மிகவும் ஈர்த்தன. கொளத்தூர் மணி அவர்களின் தோட்டத்தில்தான் மூன்று ஆண்டுகள் விடுதலைப்புலிகளின் இராணுவப் பயிற்சி நடந்தது. அதற்கான முழுச் செலவையும் கொளத்தூர் மணி அவர்கள் நன்கொடையாகவே பெற்று இராணுவ பயிற்சிக்கு உதவினார் .சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் பயிற்சிக் காலம் முழுவதும் தேவையான முட்டைகளை, அவரின் சொந்த செலவிலேயே வழங்கினார். புலிகளுக்கு உதவியதற்காக அவரும், அவரின் கணவரும் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பிறகு உச்சநீதிமன்றம் வழியாக விடுதலை செய்யப்பட்டனர்.*

*பெரியார் இயக்கத் தோழர்கள் விடுதலைப்புலிகளின் வரலாற்று கண்காட்சிகள், நிதி திரட்டல், பரப்புரை செய்தல் என்று பல்வேறு உதவிகளை பரப்புரையாகவும்,கலை இயக்கியமாகவும், நாடகம் நிகழ்த்தல் மூலமாகவும் தொடர்ச்சியாக 10 ஆண்டுகளுக்கு மேலாக முழு நேரமாகச் செய்தனர். தோழர்கள் அர்ப்பணிப்பை உணர்ந்து, பெரியாரிய சிந்தனையின் தொடர்ச்சியாக அவர் முழு பகுத்தறிவாளராகவே பரிணமித்தார். கடவுள், மத, ஆன்மா நம்பிக்கைகளில் அவருடைய நிலைப்பாடு என்ன என்பதைப் பற்றி ஆயிரம் உதாரணங்கள் சொல்ல முடியும். அருட்தந்தை ஜெகத் கஸ்பர் வன்னியில் கடைசியாக பிரபாகரனுடன் ஒரு பேட்டி எடுக்கிறார். அந்த பேட்டியை சில ஆண்டுகளுக்கு முன்பு பொது வெளியில் வெளியிட்டிருக்கிறார்.*

*அந்த பேட்டியில் ஜெகத் கஸ்பர் ஒரு கேள்வியைக் கேட்கிறார். “உங்கள் மரணத் தருவாயில் துப்பாக்கி முனையைக் காட்டி நீங்க சாகப் போகிற நேரத்தில் உங்களுக்கு கடவுள் நம்பிக்கை வருமா? கடவுளே என்று வேண்டுவீர்களா?” என்று கேட்டார். “அப்படி கடவுளை நினைக்க மாட்டேன். மரணம் என்னும் இயற்கை என்னுடைய வாழ்க்கையை முடித்து விட்டது என்றுதான் கருதுவேன்” என்று உடனடியாக பிரபாகரன் பதிலளித்தார்.*

*இரண்டாவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றாக மத அடையாளங்களை ஒதுக்கி வைத்தது. விடுதலைப்புலிகள் நடத்திய அலுவலகங்கள், கல்வி அலுவலங்கள் தொலைக்காட்சி அலுவலகங்கள், பயிற்சி அலுவலகங்கள், உணவகங்கள் உள்ளிட்ட எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு கடவுள் படமும் கிடையாது. மேதகு பிரபாகரனின் ஈழ விடுதலை தொடர்பான கருத்துக்கள் மட்டும் தான் பொறிக்கப்பட்டிருக்கும். அதேபோல, வீரச்சாவு அடைந்த போரளிகளுக்கான நிகழ்ச்சிகள் எப்படி நடக்கும் என்று சொன்னால், அவர்களுக்கு வேத மந்திரங்கள் சொல்வது, மோட்சம் செல்ல வழி செய்வது போன்ற மத சடங்குகள் எதுவும் இல்லாமல் இராணுவ அணிவகுப்போடு துப்பாக்கிக் குண்டுகள் முழங்க அவர்கள் புதைக்கப்பட்டார்கள்.*

*இறந்த பிறகு ஆன்மா மோட்சத்துக்கு போக வேண்டும் என்று, மறைந்த இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு கூட இந்தியாவில் சடங்கு செய்யப்படுகிறது. சடங்குகள் செய்யப்பட்ட பின்னர்தான் இராணுவ மரியாதை தரப்படுகிறது இந்தியாவில்.*

*ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அந்த சடங்குகள் முற்றிலும் கிடையாது. இந்த ஆன்மா மோட்சத்துக்கு போய் சுற்றிக்கொண்டு இருக்கிறது என்ற கோட்பாட்டை புலிகள் மறுத்து இந்த போராளிகள் விண்ணுக்கு போகவில்லை. ஆனால் எங்கள் மண்ணில் விதைக்கப்படுகிறார்கள் என்ற கோட்பாட்டையே பின்பற்றினார்கள்.*

(தொடரும்)

# சோவியத் புரட்சி இங்கேயே நடக்க வேண்டுமென விரும்பினார் பெரியார்!

**24.12.2024 அன்று கோவையில் நடைபெற்ற புரட்சியாளர்கள் அம்பேத்கர் – பெரியார் நினைவுநாள் பொதுக்கூட்டத்தில் தோழர் இனியவன் ஆற்றிய உரை. கடந்த இதழின் தொடர்ச்சி..**

**இனியவன்**

### சுயமரியாதை முக்கியம்!

ஒடுக்கப்பட்டவர்களுக்கு நில உரிமை வேண்டும் என்று போராடிய அம்பேத்கர் அவர்கள் அதே நேரத்தில் மகாராஷ்டிரத்தில் நிலவிய ‘மகர்வர்தான்’ முறையை நீக்க வேண்டி பம்பாய் மாகாணத்தில் கோரிக்கை வைத்தார். மகர்வர்தான் என்பது கிராமங்களில் ஏவல் பணியில் ஈடுபடும் மகர்களுக்கு (ஒடுக்கப்பட்ட ஜாதி) கிராம மக்கள இலவசமாக அளித்திடும் சிறு நிலம் ஆகும். ஆனால் அந்த நிலத்தை பெற்ற காரணத்தாலேயே நேரம் காலம் பார்க்காமல் கிராமத்திற்கான ஏவல் பணிகள் அனைத்தையும் ஓர் மகர் கண்டிப்பாக செய்தே ஆக வேண்டும். அந்த மகர் மட்டும் அல்லாமல் அவரின் குடும்ப உறுப்பினர்கள் கூட கிராமத்தினரால் அனைத்து வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டார்கள். உயர்ஜாதியினரின் பணிகளைச் செய்ய ஒரு மகர் மறுத்தால் அவரது நிலம் அவர்களிடமிருந்து பிடுங்கப்படுவதுடன் சமூக விலக்கத்திற்கும் ஆளாக நேரிடும்.

இத்தகைய கொடுமையை எதிர்த்து அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மகர்வர்தான் முறையை ஒழிக்கிற கோரிக்கையை 1948-இல் முன் வைத்தார். இங்கே நாம் புரிந்து கொள்ள வேண்டியது அண்ணல் அம்பேத்கர் கூறிய நில உரிமை என்பது வெறும் நிலம் என்கிற திடப்பொருள் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல அது சமூகத்தில் மதிப்பையும் மரியாதையையும் தலித்துகளுக்குப் பெற்றுத் தருவதாக இருக்க வேண்டும் என்பதிலும் அம்பேத்கர் கவனமாக செயல்பட்டார்.

நாட்டின் விடுதலைக்குப் பிறகானக் கட்டமைப்பு குறித்து காந்தி வலியுறுத்திய ‘கிராம சுவராஜ்’ (ராமராஜ்ஜியம்), இந்துமதவாதி சவர்க்கார் முன்வைத்த ‘குடும்பம்’, இயந்திரகதியில் கம்யூனிஸ்டுகள் முன்வைத்த ‘சுவாலம்பி கிரிஷிகிராம’ (தன்னிறைவு விவசாய கிராமம்) ஆகிய அனைத்தையும் அம்பேத்கர் முற்றிலும் மறுதலித்தார். இம்முறைகள் அனைத்தும் ஜாதியைப் பாதுகாக்கும் அம்சத்தைக் கொண்டிருந்தன.

அவுரங்காபாத்தில் முன்னெடுக்கப்பட்ட இயக்கத்தில் தீண்டத்தகாதார்களுக்கு நில உரிமை வேண்டும் என்ற கோரிக்கையை ஆட்சியாளர்களிடமும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களிடமும் வலியுறுத்திய அம்பேத்கர் கீழ்க்கண்ட கோரிக்கையும் முன் வைத்தார்

**1. இந்தியாவில் உள்ள 6 கோடி தலித் மக்களுக்கு அரசிடம் உள்ள வளம்மிக்க ஒன்பது கோடி தரிசு நிலங்களை கையளிக்க வேண்டும்.**

**2. கிராமங்களில் உள்ள ஏவல் பணி முறைகளில் இருந்து தீண்டத்தகாதார்கள் விடுவிக்கப்படுவதுடன் அவர்களுக்கென்று தனி கிராமங்களை உருவாக்க வேண்டும்.**

**3. குலத்தொழில் முறைகள் ஒழிக்கப்பட வேண்டும், விவசாயத்தை மறு சீரமைக்க வேண்டும்.**

**4. விவசாயம் என்பது அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிலாக மாற்றப்பட வேண்டும். பயிரிடுபவர்களுக்கு நீண்ட கால நிரந்தர குத்தகைக்கு விட வேண்டும்.**

**5. விவசாயம் என்பது தொழிலாக கருதப்பட வேண்டும் என்பதுடன் அது நகர வளர்ச்சியை நோக்கி முன்னெடுக்கப்பட வேண்டும்.**

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்ததுடன், ரஷ்யாவில் உள்ள கூட்டுப்பண்ணை திட்டம்தான் நமக்குத் தேவையானது என்று (vol 5 , Page 960) கூறியுள்ளார். அந்த காலகட்டத்தில் இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் நிலவுடைமைக்கு எதிராக இயக்கங்களை மேற்கொண்ட போதும் விவசாயத்தில் ஈடுபட்டு வரும் விவசாய தொழிலாளர்களுக்கான (பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட மக்கள்) நில உரிமை குறித்து முறையான திட்டம் எதையும் முன் வைக்கவில்லை.

அவ்வகையில் அம்பேத்கர் அவர்களின் பேச்சும், எழுத்தும், செயலும் ஓர் கம்யூனிஸ்ட் முழக்கங்களாகவே வெளிப்பட்டுள்ளன. காலம் கடந்தாவது அதனை உள்வாங்கிக் கொண்டு புரட்சிகர கம்யூனிஸ்ட் சக்திகளும் - தலித் அமைப்புகளும் - முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைந்து அம்பேத்கரின் கருத்தியலை களத்தில் செயல்படுத்துவோம்.

இந்திய சுதந்திரத்திற்கு பிறகு 1953-இல் பட்டியல் ஜாதி/ பழங்குடியினர் குழு ஆணையர் அறிக்கை மீதான விமர்சனம், 1954 பட்டியல் ஜாதியினர் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை, 1954 தீண்டாமை ஒழிப்பு மசோதா விவாதம், 1955-இல் பட்டியல் ஜாதியினர் கூட்டமைப்பின் அகில இந்திய செயற்குழு கூட்டம் ஆகிய எல்லா நிகழ்வுகளிலும் பட்டியல் ஜாதி / பழங்குடியினருக்கு அரசு தரிசு நிலங்களைக் கையளிக்க வேண்டும் எனக் கூறியதுடன் விவசாயிகளுக்கு நில உரிமை என்கிற விவகாரத்தில் அரசு மாபெரும் முட்டாள்தனத்தை நிகழ்த்தியுள்ளது எனவும் வெளிப்படையாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

இடதுசாரி கட்சிகள் ஆட்சியைப் பிடித்த மாநிலங்களில் செயல்படுத்தப்பட்ட நிலச் சீர்திருத்தங்கள் எவையும் புரட்சிகரமாக அமையாததுடன் அவை அனைத்தும் இந்திய ஆளும் வர்க்கத்தின் முதன்மை பங்குதாரராக விளங்கும் ஜாதி கட்டுமானத்தை எள்ளளவும் தகர்க்கவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

உழைக்கும் வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்டோர் உரிமையை வென்றெடுக்க 1927-இல் அம்பேத்கர் உருவாக்கிய ‘சுதந்திர தொழிலாளர்கள் கட்சியின் (IPL)’ கொடி சிவப்பு நிறத்தில்தான் இருந்தது. 1930-களில் கம்யூனிஸ்ட் தலைவர் R.B.மொரே அவர்களின் உறுதுணையால் IPL கட்சி கம்யூனிஸ்டுகளுடனும் இணைந்து பல்வேறு போராட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்தது.

“தொழிலாளர்கள் முதலாளித்துவம், பார்ப்பனியம் ஆகிய இரண்டையும் எதிர்த்து நிற்க வேண்டும்.” பிரிட்டிஷார் நாட்டை விட்டு வெளியேறிய பிறகும் கூட நாம் முதலாளித்துவத்தை எதிர்த்து தொடர்ந்து போராட வேண்டி இருக்கும்” எனக் கூறியதுடன், “இந்திய கம்யூனிஸ்டுகள் காரல் மார்க்ஸின் தத்துவத்தை தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். மார்க்ஸின் தத்துவத்தை அப்படியே செயல் வடிவத்துக்கு கொண்டு வருவது சாத்தியமற்றது. மேற்குலக நாடுகளில் கூட வர்க்க ரீதியாக ஒரே நிலையில் இருந்த தொழிலாளர் அய்க்கியம் என்பது ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்தியாவிலே வகைப்படுத்தப்பட்ட வர்க்கப் பிரிவுகள் இல்லை. அனைத்துத் தொழிலாளர்களும் ஒரே இனத்தவர், ஒரே வர்க்கத்தினர் என்கிற நிலையை எட்ட வேண்டியது லட்சியமாகும். ஆனால் இயல்பாகவே தொழிலாளர்கள் அவ்வாறான நிலையில் இருக்கிறார்களா என்றால் இல்லை என்பதுதான் எதார்த்தம்” என 1938 இந்திய தீபகற்ப ரயில்வே தலித் தலைவர்கள் மாநாட்டில் அம்பேத்கர் பேசியுள்ளார்.

1942-46 வரை வைசிராய் செயற் குழுவில் தொழிலாளர் துறை உறுப்பினராக இருந்த பொழுதுதான் தொழிற்சங்க உரிமை சட்டம், எட்டு மணி நேர வேலை உள்ளிட்டவை சட்ட உரிமை ஆக்கப்படன.

பம்பாய் மாகாணத்தில் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது சட்டத்திற்கு புறம்பானது என்கிற தீர்மானம் 1938 செப்டம்பர் மாதம் கொண்டு வரப்பட்டது. வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர்களின் உரிமையாகும் அதற்கு எதிரான தடை செய்யும் தீர்மானம் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு எதிரானது என கடுமையாக விமர்சித்தார். தீர்மானத்தை எதிர்த்து டாக்டர் அம்பேத்கர், எஸ். ஏ.டாங்கே, பாருலேக்கர் மற்றும் பிற தலைவர்கள் ஒன்றிணைந்து வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

போராட்டத்தில் அண்ணல் அம்பேத்கரின் சுதந்திரத் தொழிலாளர் கட்சியின் தொண்டர்கள் செஞ்சட்டையுடன் பங்கேற்றார்கள். இவ்வாறு தொழிலாளர் நலனில் முழுமையாக அக்கறை கொண்ட தலைவராக அம்பேத்கர் விளங்கினார். ஆனால் அன்றைய கம்யூனிஸ்டுகள் ஜாதி குறித்தான பார்வையில் முன்வைத்த இயந்திர வகையிலான அணுகுமுறையை கண்டித்துதான் அம்பேத்கர் கம்யூனிஸ்ட்களை சாட நேர்ந்தது. அன்றைய கம்யூனிஸ்ட் தலைவர்கள் காந்தியின் காங்கிரசை நம்பிய அளவிற்கு அண்ணல் அம்பேத்கரை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாததும் அவரின் கோபத்திற்கு காரணமாக இருந்தது.

இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில் 1942-இல் அனைத்திந்திய வானொலியில் இந்திய தொழிலாளர்களும் இரண்டாம் உலகப்போரும் என்ற தலைப்பில் உரையாற்றினார். அதில் “இந்தப் போரில் நாஜிக்கள் வெற்றி பெற்றால், சுதந்திரம் என்பது இருக்காது; சமத்துவம் என்பதும் இருக்காது.” என்றார். அதன் பிறகான கூட்டங்களில் சோவியத் ரஷ்யாவின் செம்படையை ஆதரித்து இந்தியத் தொழிலாளர்கள் நடந்திட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தார்.

இவ்வகையில் சர்வதேச அளவில் கம்யூனிஸ்டுகளின் கோரிக்கையையே அம்பேத்கர் அவர்களும் பிரதிபலித்துள்ளார். எனவே, கம்யூனிஸ்டுகளின் அடிப்படை முழக்கமான நிலம், வர்க்க விடுதலை, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கங்களின் முழக்கம் என அனைத்து நிலைகளிலும் அம்பேத்காரின் செயல்பாடு ஒத்திசைவாக இருந்தபோதிலும் இந்திய கம்யூனிஸ்டுகள் பார்ப்பனியத்தை புரிந்து கொள்ளாமல் முன்வைத்த கருத்துரைகளால்தான் அம்பேத்கரை, கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக எழுத வைத்துள்ளது என்பதே உண்மை.

அதேபோல ‘பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்’ என்பதிலும் அண்ணல் அம்பேத்கர் கொள்கை அளவில் கம்யூனிஸ்டுகளுடன் முரண்பட்டு நிற்கிறார் என்கிற போதும் பாராளுமன்ற ஜனநாயகத்தை அவர் முற்று முதலாக ஏற்றுக் கொள்கிறார். 1789-இல் நடைபெற்ற பிரஞ்சுப் புரட்சியின் வழியாகவே ‘பாராளுமன்ற ஜனநாயகம்’ என்கிற முறை உருவாக்கியது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

கம்யூனிஸ்ட் சர்வதேசிய இரண்டாம் அகிலத்தின் (COMINTRON : 1919-43) கூட்டத்தில் 1920 இல் தோழர் லெனின் முன்வைத்த “அனைத்து நாடுகளின் தொழிலாளர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைவீர்” என்கிற முழக்கத்தை இந்தியாவில் உழைக்கும் வர்க்கத்தின் அடிப்படை அலகாக விளங்குகிற ஒடுக்கப்பட்டோரின் விடுதலையை (ஜாதி ஒழிப்பை) வர்க்கப் போருடன் இணைத்து முன்னெடுக்க அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியினர் தவறிவிட்டதன் விளைவாகத்தான் அம்பேத்கருடன் முரண்பட நேர்ந்தது. தற்போது சூழல் அப்படி இல்லை பெரும்பான்மையான கம்யூனிஸ்ட் கட்சிகள் அம்பேத்கரின் கருத்துக்களை குறைந்த பட்ச விமர்சனங்களோடு முழுமையாகவோ / பகுதியாகவோ ஏற்றுக்கொண்டு இணைந்து செயல்பட ஆரம்பித்துள்ளார்கள்.

தந்தை பெரியாரைப் பொருத்தவரை அவரது கருத்துக்கள் தமிழ்நாட்டுச் சமூகம் மற்றும் அரசியலில் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணத்தால்தான் இன்று மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு அனைத்து துறைகளும் முன்னேறி இருக்கிறது. அவர் வழி வகுத்துத் தந்த திராவிட அரசியல் போக்கின் காரணமாக இன்று தமிழ்நாட்டில் இந்துத்துவம் வேரூன்ற முடியாமல் தவிக்கிறது. பெரியார் காங்கிரஸில் இருந்து வெளியேறிய பிறகு பொதுவுடமை சித்தாந்தத்தின் மீது மிகப்பெரிய ஆர்வத்தைக் கொண்டிருந்தார். பார்ப்பன ஆதிக்கம் ஒழிக்கப்படாமல் கையளிக்கப்படும் இந்திய விடுதலை என்பது ஓர் அதிகார மாற்றமே என்று பெரியாரும் அம்பேத்கரும் தீர்க்கமாகக் கூறினர்.

### வர்க்கம் என்பதே ஜாதிப் பாகுபாடே!

1925-இல் காங்கிரஸ் கட்சியிலிருந்து தந்தை பெரியார் விலகும் போது “காங்கிரஸ் கட்சி ஜாதியை பாதுகாக்கும், முதலாளித்துவ (சுரண்டல்வாத) கட்சியாக இருக்கிறது. அதை நம்புவதில் இனி எந்த பயனும் இல்லை. எனவே நான் வெளியேறுகிறேன்” எனக் கூறினார். ஜாதி ஒழிப்பை முதன்மையாகக் கொண்டு 1925-இல் சுயமரியாதை இயக்கம் தொடங்கிய போதிலும் “பணக்காரன் என்பதே தேசத்தையும் ஏழைகளையும் குடியானவர்களையும் தொழிலாளர்களையும் கெடுத்து பணம் சம்பாதித்தவர்கள் என்பதுதான் சத்தியம்” (குடியரசு ,1925) என எழுதினார். இந்தியாவில் வர்க்கம் என்பது ஜாதி பிரிவுகளாக உள்ளன என்பதையும் தகுந்த தரவுகளுடன் விளக்கியுள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை 1931-இல் தமிழில் ‘சமதர்ம அறிக்கை’ என்கிற பெயரில் தந்தை பெரியார் குடியரசு இதழில் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து மதம் குறித்து லெனின் எழுதிய புத்தகம், ஒவ்வொரு தொழிலாளியும் ஏன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர வேண்டும் என்கிற கட்டுரைகளையும், சோவியத் நாட்டில் பெண்ணுரிமை, மருத்துவக் கட்டமைப்பு, தொழிலாளர்களுக்கான உரிமைகள் குறித்தும் தொடர்ச்சியாக குடியரசு இதழில் கட்டுரைகளை வெளியிட்டார். இதிலிருந்தே தந்தை பெரியார் அவர்களுக்கு பொதுவுடமை சித்தாந்தத்தின் மீதும், சோவியத் ரஷ்யா மீதும் இருந்த ஆர்வம் அத்தகைய புரட்சி இங்கேயும் நடந்துவிட்டால் பரவாயில்லை என்கிற எண்ணமும் மேலோங்கி இருந்ததை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

1933-இல் தந்தை பெரியார் அவர்கள்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# புதியக் கல்விக் கொள்கையைத் திணிக்கும் பெரியார் பல்கலைக்கழகம்

***“ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தில் அறிமுகமா? திராவிடர் விடுதலைக் கழகம் கேள்வி!”***

***இது குறித்து கழகத் தலைவர் தோழர் “கொளத்தூர் மணி” அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை :***

சேலம் பெரியார் பல்கலைக் கழகம் அண்மையில் வெளியிட்ட முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்பு கையேட்டில் முனைவர் பட்ட படிப்பில் சேர அடிப்படை கல்வி தகுதியாக 10+2+3+2 அல்லது 12+1+3+2 அல்லது 10+2+4 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கைப் படி இளநிலைப் பட்டப் படிப்பு மூன்று ஆண்டுகளுக்கு பதிலாக 4 ஆண்டுகளாக மாற்றம் செய்யப் பட்டுள்ளதை சேலம் பெரியார் பல்கலைக் கழகம் தனது முனைவர் பட்ட சேர்க்கை வழிகாட்டியில் சேர்த்துள்ளது.

முதுநிலை பட்டப் படிப்பை முனைவர் பட்டத் தகுதியிலிருந்து நீக்கி உள்ளது. இது பல்கலைக் கழக மானியக் குழு வழிகாட்டலில் உள்ளதாகும். அதாவது முதுநிலைப் பட்டப் படிப்பு இல்லாமலும் முனைவர் பட்டப் படிப்பில் சேரலாம். இந்த முனைவர் பட்ட சேர்க்கைத் தகுதி என்பது ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையின் ஒரு கூறாகும்.

தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கைக்கு இதுவரை ஒப்புதல் கொடுக்காத நிலையில் சேலம் பெரியார் பல்கலைக் கழகம் மட்டும் ஒன்றிய அரசின் புதியக் கல்விக் கொள்கையை மறைமுகமாக செயல்படுத்த முயல்வதற்கு திராவிடர் விடுதலைக் கழகம் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு அரசு, சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தின் ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கைத் திணிப்பை எதிர்க்க வேண்டும். மேலும் சேலம் பெரியார் பல்கலைக் கழகம் விடுத்துள்ள இந்த புதிய வழிகாட்டும் நெறிமுறைகளை ரத்து செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டு உயர் கல்வியில் படிக்கும் மாணவர்கள் 10+2+3+2 பதினேழு ஆண்டுகளில் தான் முனைவர் பட்டத்தில் சேரமுடியும். ஆனால் ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையில் படிக்கும் மாணவர்கள் 10+2+4 = 16ஆண்டுகளில் முனைவர் பட்டத்தில் சேரலாம். இதனால் தமிழ்நாட்டில் படிக்கும் மாணவர்கள் பாதிக்கப் படுவார்கள். மேலும் 2 ஆண்டு முதுநிலையில் ஒரு குறிப்பிட்ட பாடங்களை மட்டும் படித்துத் தேர்வு ஆவதால் நமது மாணவர்களின் கல்வித் தரமானது புதிய கல்விக் கொள்கையின் கீழ் படித்த மாணவர்களின் கல்வித் தரத்தை விட கூடுதலாக இருக்கும்.

அவ்வாறான தமிழக அரசின் கொள்கை முடிவுக்கு எதிராக புதிய கல்விக் கொள்கையை மறைமுகமாகத் திணிக்கும் சேலம் பெரியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர், பதிவாளர், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகம் தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

***– கொளத்தூர் மணி,***
***தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.***
***03.02.25***

3ஆம் பக்கத் தொடர்ச்சி

தொழிலாளர் மாநாடு; விவசாயிகள் மாநாடு, ஜமீன்தார் ஒழிப்பு மாநாடு, லேவாதேவி ஒழிப்பு மாநாடு, நாத்திகர் மாநாடு, இளைஞர் மாநாடு, ஜமீன்தார் அல்லாதார் மாநாடு என தொடர்ச்சியாக கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தாக்கத்தின் அடிப்படையில் மேற்கண்ட மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தினார். கம்யூனிஸ்ட் தோழர்களான ஜீவா, தோழர் சிங்காரவேலர் ஆகியோருடன் இணைந்து தந்தை பெரியார் அவர்கள் பல்வேறு பணிகளை மேற்கொண்டார். 1930-36 காலகட்டங்களில் தோழர் சிங்காரவேலரும் தோழர் பெரியாரும் இணைந்து சுயமரியாதை சமதர்ம கட்சியை உருவாக்க பல்வேறு நிலைகளில் முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆனால் அரசின் நெருக்கடியினாலும், ஜாதி மதம் ஒழிப்பு போன்றவற்றில் கம்யூனிஸ்டுகள் காட்டிய சுணக்கத்தினாலும் இம்முயற்சி முழுமை அடையாமல் போய்விட்டது.

1934-இல் கம்யூனிஸ்ட் கட்சியை காலனி அரசு தடை செய்ததுடன் அந்தக் கட்சிக்கு ஆதரவாக செயல்படுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வந்தது. இதனால் தான் ஏற்றுக்கொண்ட ஜாதி ஒழிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது கூட சிக்கலாகிவிடும் என்பதனால் தந்தை பெரியார் அவர்கள் கம்யூனிஸ்ட் கொள்கைகளை சற்று ஒதுக்கி வைப்பதாக அறிவித்தார். இது ஓர் அறிவு நேர்மை மிக்க செயலாகும். அதேபோல 1948-54-இல் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் தந்தை பெரியார் அவர்கள் கம்யூனிஸ்ட் தோழர்களைப் பாதுகாக்கும் அரணாக விளங்கினார்.

அண்ணல் அம்பேத்காருக்கு ஏற்பட்ட அதே முரண்பாடுதான் தந்தை பெரியாருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி மீது ஏற்பட்டது. ஜாதி ஒழிப்பு, தீண்டாமை, பார்ப்பனிய அதிகார தகர்ப்பு, மதம் ஆகிய விவகாரங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளிப்படையாக செயல்பட தயாராக இல்லாத காரணத்தாலும் பார்ப்பனிய எதிர்ப்பு என்பதை முற்றிலுமாக கம்யூனிஸ்டுகள் புறந்தள்ளிய காரணத்தாலும் சமூக, அரசியல்ரீதியாக முற்போக்குப் புரட்சிகர சக்திகளாக விளங்கிய கம்யூனிஸ்டுகளை பார்ப்ப ஆதிக்க சக்திகள் என பெரியார் வசைப்பாடிட நேர்ந்தது. ஆனால் அந்த விமர்சனங்கள் இந்திய கம்யூனிஸ்டுகளின் செயல்பாடுகள் மீதான விமர்சனமே தவிர, கம்யூனிச சித்தாந்தத்தின் மீது அவர் விமர்சனங்களை வைக்கவில்லை. இடதுசாரி சிந்தனைகள், சமதர்ம கோட்பாட்டின்மீது இணக்கமான கோட்பாட்டையே பெரியார் கொண்டிருந்தார் என்பதை கூறி உரையை நிறைவு செய்கிறேன்.

***– நிறைவு***

## “தமிழீழமும் - திராவிடர் இயக்கமும்!” கருத்தரங்கம்; கழகத் தலைவர் சிறப்புரை

கோவை மாநகரக் கழக சார்பில் 30.01.25 அன்று “தமிழீழமும் திராவிடர் இயக்கமும்“ சிறப்புக் கருத்தரங்கம் கோவை சிவானந்தா காலனியில் கழகத் தோழர் மாதவன் தலைமையில் நடைபெற்றது. மாநகரச் செயலாளர் வெங்கடேசன் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் லோகநாயகி, சதீஸ், ஜெகதீஸ், நவீன் முன்னிலை வகித்தனர்.

இதில் கழகத் தலைவர் கொளத்தூர்மணி, புரட்சிகர இளைஞர் முன்னணியைச் சேர்ந்த வழக்கறிஞர் மலரவன் ஆகியோர் சிறப்பரையாற்றினர். கருத்தரங்கில் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர்மணி, தமிழ் ஈழத்திற்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும், இன்ன பிற அமைப்புகளுக்கும் திராவிடர் இயக்கங்களும் அதன் தலைவர்கள் - தோழர்கள் மற்றும் தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.மு.க. உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் - தொண்டர்கள் செய்த தன்னலமற்ற உதவிகளையும், பணிகளையும் விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரன் மற்றும் ஏனைய பொறுப்பாளர்கள், தளபதிகளின் ஆரிய மனுவாத எதிர்ப்பையும், புலிகளின் பகுத்தறிவு சார்ந்த நிகழ்வுகளை நினைவுகூர்ந்தார்.



மேலும் இதில் விசிக மாநகர மாவட்டச் செயலாளர் கோவை குமணன், தி.மு.க. காந்திபுரம் பகுதிச் செயலாளர் சேதுராமன், திமுக கோவை மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் டெம்போ சிவா, வி.சி.க. கோவை மாவட்ட மாநகர செய்தி தொடர்பு அமைப்பாளர் கோவை ராசா, தி.மு.க. மாவட்ட மாநகர மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் செ. மதிவாணன், தமிழ்ப்புலிகள் கட்சி மேற்கு மண்டலத் துணைச் செயலாளர் கோவை குமார், கழக மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன், நிலவழகன், ஸ்டாலின் ராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்னிலையில் மனோஜ்குமார், அபிலாஷ் பாண்டியன் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்தனர். தோழர்களுக்கு இயக்க நூல்களை வழங்கி வரவேற்றார்.இதில் தி.மு.க. வி.சி.க.உள்ளிட்ட தோழமை இயக்கத்தினர் மற்றும் பொதுமக்கள் இருநூறுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இறுதியாக கோவை மாநகரத் தலைவர் நிர்மல்குமார் நன்றி கூறினார்.

குறிப்பு: கருத்தரங்கம் தொடங்குவதற்கு முன் அரங்குகிற்கு முன்பாக பாஜக, இந்து அமைப்பை சேர்ந்தவர்கள் சுமார் 30 மேற்பட்டவர்கள் கருத்தரங்கத்திற்கு எதிராகவும், இந்து கடவுள்களை விமர்சிக்கும் கழகத் தலைவர் கொளத்தூர் மணியை கைது செய் என்று கூச்சலிட்டு சாலை மறியலில் ஈடுபட்டனர். காவல்துறை கைது செய்து அழைத்து சென்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : February 7, 2025

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

**ஆண்டு சந்தா : ரூ.300/-**

**ஐந்தாண்டு சந்தா : ரூ.1500/-**

**தொடர்புக்கு : 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை - 600096. பேச : 63697 76351**

**முழக்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு மேற்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும். மின்னஞ்சல் : newsdvk@gmail.com.**

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran